பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(31.01.2024 முதல் 04.02.2024 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182

E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 009 (01) PJN/GKMS/2024 தேதி: 30.01.2024

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (25.01.2024 முதல் 29.01.2024 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -04.02.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **25/01** | **26/01** | **27/01** | **28/01** | **29/01** | | நாள்-1 31/01 | நாள்-2 01/02 | நாள்-3 02/02 | நாள்-4 03/02 | நாள்-5 04/02 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 1 | 1 | 1 | 1 | 0 |
| 32 | 31 | 32 | 33 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 30 | 31 | 31 | 32 | 32 |
| 21 | 21 | 22 | 22 | 22 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 22 | 23 | 23 | 23 | 23 |
| 4 | 3 | 2 | 2 | 4 | மேக மூட்டம் | 3 | 6 | 5 | 3 | 4 |
| 58-91 | 63-94 | 64-96 | 63-91 | 61-98 | ஈரப்பதம் (%) | 70-90 | 60-90 | 60-90 | 60-90 | 60-90 |
| 2 | 2 | 3 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 16 | 10 | 12 | 12 | 14 |
| வடக்கு வட மேற்கு | வடக்கு வட கிழக்கு | மேற்கு வட மேற்கு | வடக்கு வட மேற்கு | வடக்கு வட கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (31.01.2024 முதல் 04.02.2024 வரை):**

- அடுத்த ஐந்து நாட்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஜனவரி 31 முதல் பிப்ரவரி 04 வரை லேசான தூறல் எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் வறண்ட வானிலையாக காணப்படும். வெப்ப நிலை 22-32 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 10-16 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது . காற்றானது பெரும்பாலும் கிழக்கு தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- பிப்ரவரி 04 லிருந்து 10 பிப்ரவரி வரை மழை (0.01 **மி.மீ**) இயல்பிற்கு குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை (31.51 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (19.02 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| **பயிர்கள்** | **பருவம்/ விவரங்கள்** | **வேளாண் ஆலோசனைகள்** |
|---|---|---|
| உளுந்து | விதைத்தல் | நெல் தரிசு உளுந்தை ஜனவரி இறுதி வரை விதைக்கலாம். நெற்பயிரை இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் போது ஏழு நாட்களுக்கு முன்னரே விதைகளை விதைக்கவும். |
| நெல் | பூங்கொத்து பருவம் | கடந்த சில வாரங்களில் நிலவிய வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் போன்ற வானிலை சூழ்நிலையானது நெற்பயிரில் குலை நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் தோன்றுவதற்கு சாதகமாக உள்ளது. ஆகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நெற்பயிரின் நோய்களைக் கட்டுப்படுத்த *சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ்* அல்லது *பேசில்லஸ் சப்டிலிஸ்* என்ற எதிர் உயிரியை 0.5 % (ஒரு லிட்டர் நீரில் 5 மிலி/ கிராம்) என்ற அளவில் 10 நாட்கள் இடைவெளியில் நடவு நட்ட 45 வது நாள் முதல் மூன்று முறை தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| | | தற்பொழுது தண்டு உருளும் பருவத்தில் உள்ள நெற்பயிர்களில் ஒரு லிட்டர் நீரில் 2 மி.லி பிக்காக்சிஸ்ட்ரோபின் + ப்ரோபிகோனசால் (Picoxystrobin 7.05% + Propiconazole 11.7% SC) அல்லது 2 மி.லி ட்ரைசைக்ளோசோல் மற்றும் அசாக்ஸிஸ்ட்ரோபின் (Tricyclazole 20.4 % + Azoxystrobin 6.8 SC %) அல்லது 2 கிராம் கார்பென்டாசிம் + மேங்கோசெப் (Carbendazim 12 % + Mancozeb 63 % WP) அல்லது 1 மி.லி அசாக்ஸிஸ்ட்ரோபின் + டைபெனோகோணசோல் (18.2 % + Difenoconazole 11.4 % SC) மருந்து கலந்த கரைசலை ஏதாவது ஒன்றினை உடனடியாக தெளிக்க வேண்டும். மேலும் இந்த மருந்து கலைவகளில் ஏதாவது ஒன்றினை 50 சத பூக்கள் வெளிவந்தவுடன் மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும். |
| **கால்நடை** | உண்ணி காய்ச்சல் | கால்நடைகளில் ஜனவரி மாதத்தில், ஒட்டுண்ணியால் உண்ணி காய்ச்சல் நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.<br>இந்நோயானது புற ஒட்டுண்ணிகள் கறவை மாடுகளின் ரத்தத்தை உறிஞ்சும்போது, மாடுகளுக்கு உண்ணி காய்ச்சல் உண்டாகும். நோய் தாக்கப்பட்ட கறவை மாடுகளின் கண் இமைகளின் சவ்வு மற்றும் இனப்பெருக்க உறுப்பின் சவ்வு போன்றவை வெளிர்நிறத்தில் காணப்படும்.<br>சிவப்பு நிறத்தில் சிறுநீர் கழிக்கும்; ரத்தசோகை, மஞ்சள் காமாலை போன்ற அறிகுறிகள் ஏற்படும். இவற்றை கவனிக்காமல் விட்டு விட்டால் சில நாட்களுக்கு பிறகு, மூச்சுத்திணறல் ஏற்பட்டு, மாடுகள் இறக்க நேரிடும்.<br>இந்நோயை கட்டுப்படுத்த, கால்நடை மருத்துவரை உடனடியாக அணுகவும்.<br>கொட்டகையை சுத்தமாக பராமரித்தாலே, உண்ணிக்காய்ச்சல் நோயை தவிர்க்கலாம்.<br>இந்நோயைத் தடுக்க உண்ணியைக் கட்டுப்படுத்த பூட்டாக்ஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். மாடுகளை இம்மருந்து கொண்டு குளிப்பாட்டலாம். கால்நடைக் கொட்டகைக்கு அருகாமையிலுள்ள இடங்களிலும் இம்மருந்தினை தெளிக்கவேண்டும். |

**குறுஞ்செய்தி:** **நெல் தரிசு உளுந்தை ஜனவரி இறுதி வரை விதைக்கலாம்.**

**முதல்வர்**